# அனிமேஷன் புராணக்கதைத் தழுவல் - ஓர் ஆய்வு

**பா. செந்தில்குமார்**
உதவிப் பேராசிரியர்
காட்சி ஊடகத்துறை
VISTAS, சென்னை

**முனைவர் பி.சாந்தி**
இணைப் பேராசிரியர் மற்றும் துறைத்தலைவர்
காட்சி ஊடகத்துறை
VISTAS, சென்னை

**மலர்:** 3
**இதழ்:** 3
**தொகுதி:** II
**மாதம்:** ஜனவரி
**வருடம்:** 2019
**ISSN:** 2454-3993

**கதையின் தலைப்பு: 'பேராசை பெருநஷ்டம்'**

**கதைச்சுருக்கம்**

பேராசை பெருநஷ்டம் என்பதே இக்கதையின் கருத்து. மேலோகத்தில் இருந்து பூமிக்குவரும் வெள்ளை யானையின் வாலை பற்றிக்கொண்டு ஒருவன் பெரும் பணக்காரனாகிறான். அவனது வழியைப் பின்பற்றி ஊரே பணக்காரனாக உழைக்காமல் முன்னேற நினைத்து வீழ்ந்து மடிவதே இக்கதையின் சுருக்கம்.

**கதை**

விவசாயி ஒருவன் கரும்பைப் பயிரிட்டு அமைதியாக வாழ்கிறான். அவனே தனது தோட்டத்தில் இரவு முழுவதும் காவலாளியாக இருந்து கவனிக்கிறான். ஒருநாள் தேவலோகத்தில் இருந்து வெள்ளைநிற பொன், பட்டாடை உடுத்திய வைரத்தில் அணிகலன்களுடன் யானை ஒன்று மெதுவாக மிதந்தபடியே அவனது தோட்டத்தில் வந்து இறங்குகிறது. அவன் ஆச்சர்யத்தோடு அதனை பார்த்தபடியே இருக்கும்போது அந்த வெள்ளை யானை கரும்பைப் பசியாற உண்ணுகிறது. பின்பு வந்த வழியே மேலே செல்கிறது. மறுநாளும் அதே வெள்ளை யானை அவனது தோட்டத்தில் இறங்கிப் பசியாறுகிறது. இம்முறை அந்த யானை மேலே பறக்க முயலும்போது விவசாயி ராமு அதன் வாலைப் பற்றியபடியே மேலே பறந்து செல்கிறான். பல உலகங்களைத் தாண்டி இந்திரலோகத்தை அடைகிறான். அங்கு வைர வைடூரியங்கள், பொற்காசுகள், அணிகலன்கள் குவியல் குவியலாக கிடக்கின்றன. அவன் முடிந்தமட்டும் தன் கைகளாலும், பைகளாலும் அவற்றை அள்ளிக்கொண்டு யானை பூலோகம் செல்லும்வரை காத்திருக்கிறான். பின்பு அதன் வாலைப் பற்றியபடியே கீழே வந்து தோட்டத்தில் இறங்குகிறான்.

ஓரிரு நாளில் அவனது மாளிகை குபேரபுரியாக மாறுகிறது. இது தொடர்கதை ஆகிறது. இவனது திடீர் வளர்ச்சியைக் கண்ட மற்றவர்கள் இவனிடம் ரகசியத்தை கேட்கிறார்கள், பின்னர் விவசாயி யானையின் வாலை பற்றியபடியே பறக்கும்போது ஊரில் உள்ள ஒவ்வொருவரும் அவனது காலைப் பற்றியபடியே மேலே செல்கிறார்கள். ஒவ்வொருவரும் மற்றவரின் காலைப் பின்பற்றியபடியே தொங்கியபடியே செல்லும்போது விவசாயியிடம் ஆசையைத் தடுக்கமுடியாமல் நம் அனைவருக்குமே தங்கம் வைரம் நிறைய கிடைக்குமா? எனக் கேட்கிறார்கள். ஆமாம் நிறைய கிடைக்கும் என

விவசாயி ராமு உறுதியாக கூறுகிறான். ஆனால் அவர்கள் சந்தேகத்தோடு எவ்வளவு அங்கே இருக்கும் என கேட்கிறார்கள். பதில் கூறுவதற்காக ராமு தனது கைகளை விரித்தபடியே இவ்வளவு! என உரைக்கிறான். அவன் பிடி விலகியதால் அனைவருமே ஐயோ! என்று கத்தியபடியே பூமியின்மீது விழுகிறார்கள்.

முழுமையான திரைக்கதை அமைக்கும் முன்பு ஒவ்வொரு முக்கியமான நிகழ்வுகளையும் ஒரு வரி நிரலாக கீழ் உள்ளவாறு எழுதிட வேண்டும்.

**ஒரு வரி நிரல்**

(i) விவசாயி ராமு தனது தோட்டத்தில் கரும்பு பயிரிடுதல்.
(ii) கரும்பு வளர்ந்து பசுமையாகக் காட்சியளித்தல்.
(iii) விவசாயி ராமு தோட்டத்தில் இரவு நேரத்தில் காவல் இருத்தல்.
(iv) வானிலிருந்து வெள்ளையானை மிதந்தபடியே வந்து தோட்டத்தில் இறங்குவது.
(v) விவசாயி ராமுவின் கண் எதிரே மெதுவாக கரும்பைச் சுவைத்துவிட்டு மீண்டும் வானிற்குப் பறந்து திரும்பி விடுவது.
(vi) சில நாட்களுக்கு பிறகு மீண்டும் வெள்ளை யானை தோட்டத்தில் இறங்குவது.
(vii) இந்த முறை யானை பறந்து மேலேறி செல்லும்போது ராமு விவசாயி அதன் வாலைப்பற்றி கொள்ளுதல்.
(viii) யானை பறந்தபடியே மிதந்து இந்திரலோகத்தின் வாசலில் இறங்குவது.
(ix) இந்திரலோகத்தில் வைரம் வைடூரியங்கள், பொற்காசுகள் அணிகலன்கள் குவிந்து கிடப்பது.
(x) யானை கரும்பு தோட்டத்துக்கு இறங்கும்வரை காத்திருந்து மெதுவாக நகைகளுடனும் பொற்காசுகளுடனும் ராமு யானை வாலைப் பற்றிக் கொள்ளுதல்.
(xi) மீண்டும் தோட்டத்தில் இறங்கி தனது இல்லத்திற்கு ஓடுதல்.
(xii) மறுநாளே ராமுவின் மாளிகை குபேரபுரியாகப் பளபளவெனக் காட்சியளிப்பது.
(xiii) ஊர் மக்கள் அவனிடம் அதன் இரகசியத்தைக் கேட்பது.
(xiv) மறுநாள் யானையின் வாலைப் பிடிக்க ராமு காத்திருக்கும் சமயம், அனைவரும் பதுங்கியபடியே வருவது.
(xv) யானை மீண்டும் கரும்பைச் சுவைத்தபடியே மேலே செல்வது.
(xvi) ஊர்மக்கள் அனைவரும் ஒருவர் காலை ஒருவராகப் பற்றியபடியே தொங்கியபடியே மேலேறி செல்வது.
(xvii) ஆவல் மிகுதியால் அனைவரும் ராமுவிடம் செல்வத்தின் அளவைக் குறித்து மீண்டும்மீண்டும் கேட்பது.
(xviii) ராமு கை விரித்து ‘இவ்வளவு’ எனக் கூறும்போது அனைவரும் ஒருவர் பின் ஒருவராக பூமியில் விழுவது.

**கதைத்தளம்**

ஒவ்வொரு காட்சியையும், பாத்திரங்களின் அசைவுகளையும், நகர்வையும் படங்களாக கைகளால் வரைந்து அவற்றை முறையாகப் பின்பற்றி அனிமேசனோ, திரைப்படமோ, தொலைக்காட்சி நிகழ்ச்சிகளோ எடுக்கப்படுகின்றன. வரையப்பட்ட கதையே கதைத்தளம் என்றழைக்கப்படுகிறது. அனிமேஷனில் கதை எழுதப்பட்டுப் பின்னர் பாத்திரங்கள் கேரக்டர்கள் வரையப்பட்டு அதன்பின் களிமண்ணால் உருவங்கள் செய்யப்பட்டு அதன் அசைவுகளைத் தெளிவாக உணர்ந்த பின்னரே கணினி உதவியுடன் 2-D அல்லது 3-D ஆக மாற்றம் செய்யப்படுகின்றன.

இறுதி வடிவமுடைய காட்சிப்படுத்தவேண்டிய ஆக்கம் திரைப்படத்தில் பின் உள்ளவாறு காணப்படும்

| தலைப்பு : பேராசை பெரு நஷ்டம்<br>காட்சி : 1<br>கதாபாத்திரங்கள்: ராமு | | | | பகல் வெளிச்சம்<br>வெளிப்புறம் |
|---|---|---|---|---|
| காட்சி | ஷாட் | விளக்கம் | வசனம் | ஓசை |
| 1 | 1 | Extreme long Shot லிருந்து long shot ல் ராமு விவசாயம் செய்து கரும்பு பயிரிடுதல் சுழன்றும் ஏர்பின்னது உலகு ஆதலால் உழன்றும் உழவே தலை | வசனம் உழைப்பே உயர்வு தரும்..., | Melody Background |

| கதாபாத்திரம்: ராமு | | | | வெளிப்புறம் |
|---|---|---|---|---|
| காட்சி | ஷாட் | விளக்கம் | வசனம் | ஓசை |
| 2 | 1 | பயிர்கள் Close-லிருந்து பசுமையாக வளர்ந்து தோட்டம் முழுவதும் நிறைந்து வளர்வது Zoom back | வசனம் இல்லை | பாடல் |
| | 2 | ராமு முகம் மலர்ச்சியாக தண்ணீர் தெளித்தல் Long shot-ல் | வசனம் இல்லை | பாடல் |

| கதாபாத்திரங்கள்: ராமு, வெள்ளை யானை | | | | இரவுவேளை<br>வெளிப்புறம் |
|---|---|---|---|---|
| காட்சி | ஷாட் | விளக்கம் | வசனம் | ஓசை |
| 3 | 1 | வெள்ளை நிற யானை ஒன்று Extreme long shot-ல் வானத்தில் இருந்து மிதந்தபடியே கரும்பு தோட்டம் வரை பறந்தபடியே வருவது. | வசனம் இல்லை | இரவுவேளை<br>கிரீச் சப்தம |
| | 2 | ராமு ஆச்சரியமாக விழிப்பது Close up | வசனம்<br>ஆஹா என்ன அழகு? | இரவுவேளை<br>கிரீச் சப்தம் |
| | 3 | ராமுவின் முகத்திலிருந்து Close up வழ Extreme long shot | வசனம் இல்லை | யானை பிளிறுவது |
| | 4 | ராமுவின் Close up shot | வசனம் இல்லை | யானை பிளிறுவது |

| கதாபாத்திரங்கள்: ராமு, வெள்ளை யானை | | | | இரவுவேளை<br>வெளிப்புறம் |
|---|---|---|---|---|
| காட்சி | ஷாட் | விளக்கம் | வசனம் | ஓசை |
| 4 | 1 | யானை Long shot -ல் இருந்து பறந்து Extreme long shot-ல் வானை நோக்கி பறந்து செல்வது | வசனம் இல்லை | பாடல் |
| | 2 | ராமுவின் ஆச்சரியம் Close up shot | வசனம் இல்லை | பாடல் |

மேற்கண்டவாறு ஒரு அனிமேஷன் திரைக்கதையை அமைக்கவேண்டும். புராணக் கதையைத் தழுவியும் மேற்கண்டவாறு அமைக்கவியலும்.